**நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட்**

எக்ஸ்சேஞ்ச் பிளாஸா, பாந்திரா குர்லா காம்ப்ளெக்ஸ், பாந்திரா [கிழக்கு] மும்பை-400 051.

தொ.எண்: 91-22-659 8100-659 8114. ஃபேக்ஸ் எண்: 91-22-659 8120.

இணையதளம்: nseindia.com



# தெளிவான மத்தியஸ்தம்

**நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச்**
**ஆஃப் இந்தியா லிமிடெட்**

**கே. கோரிக்கைத் தொகைக்கான வட்டியை பிரச்சினையை எழுப்பும் நபர்கள் கோர முடியுமா?**

வி. மத்தியஸ்தர் நியாயமானது எனக் கருதும் குறிப்பிட்ட வட்டி விகிதம் மற்றும் காலம் இவற்றின்படி மத்தியஸ்தர் கோரிக்கைத் தொகையில் வட்டியைச் சேர்த்து தனது தீர்ப்பில் குறிப்பிடலாம்.

**கே. எக்ஸ்சேஞ்சில் மத்தியஸ்தத்துக்குப் பின் மேல் முறையீடு செய்ய வாய்ப்புள்ளதா?**

வி. இல்லை, எக்ஸ்சேஞ்சில் மத்தியஸ்தத்துக்குப் பின்பு மேல் முறையீடு செய்ய வழியில்லை. எனினும், தனி மத்தியஸ்தர் அல்லது மத்தியஸ்தர்கள் குழு வழங்கிய தீர்ப்பை நிறுத்தி வைக்குமாறு, ஆர்பிட்ரேஷன் அண்ட் கான்சிலியேஷன் சட்டம் 1956ன் கீழ் பாதிக்கப்பட்ட தரப்பினர் சம்பந்தப்பட்ட நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்க முடியும்.

**கே. ஒரு தீர்ப்பு எப்போது சட்டபூர்வமாகிறது?**

வி. தீர்ப்பை நிறுத்தி வைக்குமாறு விண்ணப்பிக்க வேண்டிய காலம் கடந்து விட்டால் அதாவது தீர்ப்பு வழங்கப்பட்ட 3 மாதங்களுக்குள் தீர்ப்பை நிறுத்தி வைக்குமாறு விண்ணப்பம் செய்யப்படாவிட்டால், அல்லது அத்தகைய விண்ணப்பம் சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டு விட்டால், தீர்ப்பு ஆனது சட்டபூர்வமான ஒன்றாகிறது. இத்தகைய நிலையில் ஆர்பிட்ரேஷன் அண்ட் கான்சிலியேஷன் சட்டம் 1956ன் கீழ் தீர்ப்பு ஆனது சட்டபூர்வமாகி விடுகிறது.

உத்தரவாத மறுப்பு: இந்த தகவல் புத்தகத்தில் அடங்கியுள்ள தகவல்கள் எவ்வித முன்னறிவிப்புமின்றி மாறுதலுக்குட்பட்டவை. தெளிவான மற்றும் முழுமையான தகவல்களை அளிப்பதை உறுதிசெய்யும் விதத்தில், எக்ஸ்சேஞ்ச் பெருமளவில் முயற்சி மேற்கொள்கிறது. எனினும், இந்த தகவல்களுக்கு எவ்வித உத்தரவாதமோ அல்லது இதில் ஏதேனும் தவறுகள் அல்லது விடுபட்டுப் போனவை இருப்பின் அதற்காக பொறுப்பு ஏற்கவோ எக்ஸ்சேஞ்சால் இயலாது. இந்த தகவல்களை எந்த வித கோரிக்கை, நிபந்தனை மற்றும் வேறு எந்த நடவடிக்கைக்கும் யாரும் பயன்படுத்த இயலாது.
குறிப்பிட்ட வழக்குகள் மற்றும் பிரச்சினைகளுக்கு சம்பந்தப்பட்ட விதிமுறைகள் மற்றும் சுற்றறிக்கைகளைப் பார்க்கவும்.

கே. வித்தியாசம் உள்ளது என கோரும் தொகை, அல்லது பிரச்சினை என்பது ஒரு சிறு தொகையாக இருக்கும் பட்சத்தில் ஒருவர் விசாரணையைக் கோர முடியுமா?

வி. வித்தியாசம் உள்ளது என கோரும் பணம் அல்லது பிரச்சினையில் வித்தியாசம் ரூ. 25,000 அல்லது அதற்குக் குறைவான மதிப்புள்ள தொகை எனில், எவ்வித விசாரணைக்கும் இடமில்லை. எனினும், வித்தியாசம் உள்ளது எனக் கோரும் பணம் அல்லது பிரச்சினைக்கு உட்பட்ட பணம் என்பது ரூ. 25,000க்கும் மேற்பட்ட தொகை எனில், இருதரப்பினரும் இத்தகைய விசாரணைக்காக தங்கள் உரிமைகளை விடப் போவதில்லை என எழுத்து மூலம் தெரிவித்தால், மத்தியஸ்தர் அவர்களுக்காக விசாரணையை நடத்துவார்.

கே. தனி மத்தியஸ்தர் அல்லது மத்தியஸ்தர்கள் குழு விசாரணையை ஒத்தி வைக்க இயலுமா?

வி. இயலும். இரு தரப்பினரில் யார் விசாரணையை ஒத்தி வைக்க விரும்பினாலும், அவர்கள் தகுந்த காரணங்கள் உடன் முன்னதாகவே, அதை எழுத்து மூலமாக எக்ஸ்சேஞ்சுக்கு விண்ணப்பிக்க வேண்டும் இதனால், எக்ஸ்சேஞ்ச் மத்தியஸ்தருக்கு இந்த வேண்டுகோளை அனுப்ப முடியும். மத்தியஸ்தர் அவளின்/அவரின் தகுந்த காரணங்களைப் பொறுத்து அவளின்/அவரின் முடிவுப்படி இந்த ஒத்திவைப்பு பற்றி தீர்மானிப்பார்கள்.

கே. ஒப்புக்கொண்ட விதிகள்படி தீர்ப்பு வழங்கப்படுமா?

வி. ஆமாம். ஒரு மத்தியஸ்தரை நியமித்த பிறகு இரு தரப்பினரும் சுமுகமாக பிரச்சினைக்கு முடிவு காண முடியும். அதன் பின்பு ஒப்புக்கொண்ட விதிகள்படி பிரச்சினைக்கான மத்தியஸ்த தீர்ப்பை மத்தியஸ்தர் வழங்குவார்.

கே. தனி மத்தியஸ்தர்/மத்தியஸ்தர்கள் குழுவால் வழங்கப்படும் தீர்ப்பு எந்த வடிவில் இருக்கும்?

வி. தீர்ப்பு ஆனது எழுத்து வடிவில் மூன்று அசல்களாக தனி மத்தியஸ்தரின் கையெழுத்து மற்றும் தேதியுடன் அல்லது மத்தியஸ்தர்கள் குழு எனில் அனைத்து மூன்று மத்தியஸ்தர்களாலும் கையெழுத்து இடப்பட்டு, தேதியிடப்பட்டு வழங்கப்படும்.

நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சில், நாங்கள் எங்கள் சேவை நிலைகளை மேம்படுத்தவும், முதலீட்டாளர்களுக்கு உகந்த விதத்தில் இந்த அமைப்பை செயல்பட வைக்கவும் நாங்கள் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம். எனவே, முதலீட்டாளரின் புகார்களை கவனிக்க, நாங்கள் இன்வெஸ்டர் கிரீவன்ஸ் செல் (ஐஜிசி) ஒன்றை அமைத்துள்ளோம்.

கேபிடல் மார்க்கெட் (மூலதனச் சந்தைகள்) நிறுவனங்கள் மற்றும் சட்ட விவகாரங்கள் போன்ற துறைகளில் சிறந்த அனுபவம் பெற்ற நிர்வாகிகளால் ஐஜிசி நிர்வகிக்கப்படுகிறது. இவர்கள் உங்களின் பிரச்சினைகளை கவனிப்பதற்காக சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள். உங்கள் பிரச்சினைகளை சரிவரக் கவனித்து, விரைவில் அதற்குரிய தீர்வு கண்டறிவார்கள். முதலீட்டாளரால் தாக்கல் செய்யப்படும் ஒரு நியாயமான புகாருக்கு அதற்கென தனிப்பட்ட ஓர் எண் கொடுக்கப்பட்டு, தீவிரமாக கண்காணிக்கப்படும். பெற்றுக் கொள்ளப்பட்ட புகாரை, ஐஜிசி தொடர்ந்து கண்காணித்து அதற்குரிய நடைமுறைகளை மேற்கொள்ளும். இத்தகைய நடைமுறைகள் ஏதும் உரிய பயன் தர இயலாவிடில், அதாவது பிரச்சினை தீர்க்கப்பட முடியவில்லை எனில், அது மத்தியஸ்தத்துக்கு விடப்படும்.

**கே. மத்தியஸ்தம் என்றால் என்ன?**

வி. வணிக உறுப்பினர்கள் (டிரேடிங் மெம்பர்ஸ்) ஒருவருக்கு ஒருவர் மத்தியிலும் மற்றும் வணிக உறுப்பினர்கள் மற்றும் கான்ஸ்டிடியூயன்ட்ஸ் (அதாவது டிரேடிங் மெம்பர்களின் வாடிக்கையாளர்கள்) இவர்களுக்கு இடையில் எக்ஸ்சேஞ்சில் நடைபெறும் வணிகங்களில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க, எக்ஸ்சேஞ்ச் வழங்கும் ஒரு மாறுதலான தீர்வு காணும் முறையே மத்தியஸ்தம் ஆகும். இதர முறைகளில் தீர்வு காண்பதை ஒப்பிடும்போது, இந்த முறையில் தீர்வு காண்பது மிக துரிதமானதாகும்.

**கே. மத்தியஸ்தர்களாக செயல்படக் கூடியவர்கள் யார்?**

வி. ஒவ்வொரு பிராந்தியமையத்துக்கும் **செபி**யால் அங்கீகரிக்கப்பட்ட தகுதியான நபர்களின் பட்டியலை எக்ஸ்சேஞ்ச் வழங்குகிறது. இந்த மத்தியஸ்தர்கள் பட்டியலில் இடம் பெறும் நபர்கள் வங்கித்துறை, நிதி, சட்டம் (நீதிபதிகள்) மற்றும் மூலதனச் சந்தை அமைப்புகள் (புரோக்கர்கள்) போன்ற துறைகளில் அனுபவமிக்கவர்களாய் இருப்பார்கள்.

**கே. எக்ஸ்சேஞ்சில் மத்தியஸ்த வசதியை யார் பெறமுடியும்?**

வி. எக்ஸ்சேஞ்சில் இந்த மத்தியஸ்த வசதியை பெற தகுதியுடையவர்களின் விபரம் கீழ்க்கண்டவாறு:

1. எக்ஸ்சேஞ்சின் டிரேடிங் மெம்பர்கள் மூலமாக எக்ஸ்சேஞ்சில் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் முதலீட்டாளர்கள். இவர்கள் எக்ஸ்சேஞ்சின் டிரேடிங் மெம்பர் வழங்கும் சரியான கான்ட்ராக்ட் நோட் பெற்றிருக்க வேண்டும்.
2. என்எஸ்இ-ன் பதிவு செய்துள்ள டிரேடிங் மெம்பர்களின், பதிவு செய்துள்ள சப்-புரோக்கர்கள் மூலமாக எக்ஸ்சேஞ்சில் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் முதலீட்டாளர்கள். இவர்கள் பதிவு பெற்ற சப்-புரோக்கரின் சரியான விநபனை/ வாங்கல் நோட் பெற்றிருக்க வேண்டும்.
3. தன்னுடைய கான்ஸ்டிடியூயன்ட் அல்லது மற்றொரு டிரேடிங் மெம்பர் உடன் கோரிக்கை, பிரச்சினை அல்லது கருத்து வேறுபாடு கொண்டுள்ள டிரேடிங் மெம்பர்கள்.

**கே. கோரிக்கை, கருத்து வேறுபாடு அல்லது பிரச்சினை எனில், மத்தியஸ்தத்துக்கான விண்ணப்பத்தை தாக்கல் செய்வதற்குரிய காலக்கெடு என்ன?**

வி. பிரச்சினை ஏற்பட்ட தேதியிலிருந்து 6 மாத கால அளவுக்குள் மத்தியஸ்தத்துக்கான விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

**கே. பிரச்சினை தீர்வு சம்பந்தமாக செலுத்தப்பட வேண்டிய இதர ஊதியங்கள், கட்டணங்கள், செலவுகள் என்ன?**

வி. மத்தியஸ்தரை நியமிப்பது மற்றும் மத்தியஸ்த நடவடிக்கைகளை மேற்கொள்வது சம்பந்தப்பட்ட அனைத்து ஊதியங்கள் மற்றும் கட்டணங்கள் மதத்தியஸ்தரால் தீர்மானிக்கப்படும் விகிதத்தில், சம்பந்தப்பட்ட நபர்களால் சரிசமமாகப் பிரித்துக் கொள்ளப்பட வேண்டும். அத்தகைய ஊதியங்கள்/கட்டணங்கள் மத்தியஸ்த விண்ணப்பத்தை தாக்கல் செய்யும்போது டெபாசிட்களாக சம்பந்தப்பட்டவர்களிடம் இருந்து வசூலிக்கப்படும். செலவுகள் போக மீதி ஏதும் இருப்பின், அவை சம்பந்தப்பட்டவர்களுக்கு மீண்டும் வழங்கப்பட்டு விடும்.

மத்தியஸ்த நடவடிக்கைகளை மேற்கொள்ள ஊதியங்கள் மற்றும் கட்டணங்கள் போக கூடுதலாக ஏதும் செலவுகள் இருக்குமாயின், அதை சம்பந்தப்பட்டவர்கள் எவ்விதம் செலுத்த வேண்டும் என்பது மத்தியஸ்தரால் தீர்மானிக்கப்படும். மத்தியஸ்தர் செலவுகள் பற்றி ஏதும் குறிப்பாகக் கூறவில்லை எனில், ஒவ்வொரு தரப்பினரும் அவர்களது பயணம் மற்றும் இதர செலவுகளுக்கு அவர்களே சொந்தமாகப் பணம் செலவு செய்ய வேண்டும்.

**கே. ஒரு மத்தியஸ்தர் எப்படி நியமிக்கப்படுகிறார்?**

வி.
1. மத்தியஸ்தரின் நியமனம் கோரிக்கைத் தொகையைப் பொறுத்தது. கோரிக்கைத் தொகை ரூ. 25 இலட்சங்கள் அல்லது அதற்குக் குறைவாக இருந்தால், ஒரு தனி மத்தியஸ்தர் நியமிக்கப்படுகிறார். மற்றும் கோரிக்கைத் தொகை ரூ. 25 இலட்சங்களுக்கும் மேற்பட்டது எனில், மூவர் கொண்ட மத்தியஸ்தர் குழு நியமிக்கப்படுகிறது.

2. மத்தியஸ்தம் கோரும் நபர்கள் சம்பந்தப்பட்ட ஆர்ஏசி-யில் மத்தியஸ்தர்களாய் செயல்பட எக்ஸ்சேஞ்சால் தகுதிமிகு நபர்கள் என வழங்கப்படும் பட்டியலில் இருந்து, எக்ஸ்சேஞ்சுக்கு அவர்களின் பெயர்களை தேர்ந்தெடுத்து (கீழ்நோக்கு வரிசையில்) அளிக்க வேண்டும். வழக்கு சம்பந்தப்பட்ட நபர்கள் தேர்ந்தெடுக்கும் மத்தியஸ்தர்கள் எண்ணிக்கை சம்பந்தப்பட்ட ஆர்ஏசி அமைந்துள்ள இடம் மும்பை எனில் ஏழு ஆகவும், டெல்லி, கல்கத்தா மற்றும் சென்னை எனில் ஐந்து ஆகவும் இருக்கும். இரு தரப்பினரிடமிருந்தும் படிவம் எண். II-ஐ பெற்றுக் கொண்டதும் எக்ஸ்சேஞ்ச் சம்பந்தப்பட்ட நபர்களின் பெரும்பான்மையான விருப்பப்படி தனி மத்தியஸ்தரையோ அல்லது மத்தியஸ்தர் குழுவையோ கண்டறிகிறது.

3. ஒரு வேளை பொதுவான தனி மத்தியஸ்தர் அல்லது மத்தியஸ்தர்கள் குழு கண்டறியப்படவில்லை எனில், எக்ஸ்சேஞ்ச் மத்தியஸ்தர்களாக செயல்பட தனி மத்தியஸ்தர் அல்லது மத்தியஸ்தர்கள் குழுவை அதற்குரிய நபர்கள் பட்டியலில் இருந்து தேர்ந்தெடுக்கும்.

**கே. மத்தியஸ்தத்துக்காக ஓர் விண்ணப்பத்தை டிரேடிங் மெம்பர் தாக்கல் செய்யும்போது, எக்ஸ்சேஞ்சுக்கு செலுத்தப்பட வேண்டிய டெபாசிட்கள் மதிப்பு தொகை என்ன?**

வி. கோரிக்கைத் தொகையின் அடிப்படையில், டிரேடிங் மெம்பர் விண்ணப்பதாரர் ஆனாலும் சரி அல்லது பிரதிவாதி ஆனாலும் சரி, எக்ஸ்சேஞ்சுக்கு டெபாசிட் தொகை செலுத்த வேண்டும்.

| வரி. எண் | கோரிக்கைத் தொகை | டெபாசிட் தொகை |
|---|---|---|
| 1. | அதிகபட்சம் ரூ. 5 இலட்சங்கள் வரை | ரூ. 4000 |
| 2. | ரூ. 5 இலட்சங்கள் மற்றும் அதற்கு மேல், அதோடு அதிகபட்சம் ரூ. 25 இலட்சங்கள் வரை | ரூ. 6000 |
| 3. | ரூ. 25 இலட்சங்களுக்கு மேல் | ரூ. 12000 |

மத்தியஸ்த நடவடிக்கை செலவுகளுக்கு இந்த டெபாசிட் தொகைகள் குறைவு என எக்ஸ்சேஞ்ச் கருதினால், மேற்குறிப்பிட்ட டெபாசிட்களைத் தவிர, அது கூடுதல் டெபாசிட்களைக் கோரவும் செய்யலாம். கூடுதலாக செலுத்தப்படும் டெபாசிட்கள் டெபாசிட்களின் ஒரு பகுதியாகவே கருதப்படும்.

**கே. ஒரு முதலீட்டாளர் (டிரேடிங் மெம்பர் மூலமாக எக்ஸ்சேஞ்சில் வணிகம் செய்பவர்) மத்தியஸ்தத்துக்காக ஒரு விண்ணப்பத்தை தாக்கல் செய்ய எக்ஸ்சேஞ்சுக்கு டெபாசிட் செலுத்த வேண்டுமா?**

வி. முதலீட்டாளர் (டிரேடிங் மெம்பரின் வாடிக்கையாளர்) விண்ணப்பதாரர் ஆகவோ, அல்லது பிரதிவாதியாகவோ இருந்தால், அவர்/அவள் கோரிக்கைத் தொகையின் அடிப்படையில், கீழ்க்கண்ட டெபாசிட் தொகையை எக்ஸ்சேஞ்சுக்கு செலுத்த வேண்டும்.

| வரி. எண் | கோரிக்கைத் தொகை | டெபாசிட் தொகை |
|---|---|---|
| 1. | அதிகபட்சம் ரூ. 5 இலட்சங்கள் | Nil* |
| 2. | ரூ. 5 இலட்சங்கள் மற்றும் அதிகபட்சம் ரூ. 25 இலட்சங்கள் வரை | ரூ. 6000 |
| 3. | ரூ. 25 இலட்சங்களுக்கு மேல் | ரூ. 12000 |

மத்தியஸ்த நடைமுறை செலவுகளுக்கு இந்த டெபாசிட்கள் தொகை குறைவு எனக் கருதினால், எக்ஸ்சேஞ்ச் கூடுதல் டெபாசிட் தொகைகளைக் கேட்கலாம். கூடுதல் டெபாசிட்கள் தொகை டெபாசிட் தொகைகளின் ஒரு பகுதியாகவே கருதப்படும்.

**அதிகபட்சம் ரூ. 5 இலட்சங்கள் வரையிலான கோரிக்கைத் தொகைக்கு, வாடிக்கையாளர் சார்பாக மத்தியஸ்தச் செலவுகளை எக்ஸ்சேஞ்ச் ஏற்றுக் கொள்ளும்.*

**கே. மத்தியஸ்தத்துக்காக விண்ணப்பிக்க படிவம் ஏதும் உண்டா?**

வி. டிரேடிங் மெம்பர்/டிரேடிங் மெம்பரின் வாடிக்கையாளர் போன்றோர் எக்ஸ்சேஞ்ச் இடம் படிவம் 1ல் மத்தியஸ்தத்துக்காக விண்ணப்பிக்க வேண்டும். (தனிப்பட்ட ஒரே மத்தியஸ்தர் எனில் மூன்று பிரதிகள் மற்றும் மத்தியஸ்தர் குழு எனில் ஐந்து பிரதிகள் என விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்). அதோடு கீழ்க்கண்ட ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(i) வழக்கு அல்லது பிரச்சினை சம்பந்தப்பட்ட விபரக் குறிப்பு (பிரச்சினை அல்லது கோரும் நிவாரணம் சம்பந்தப்பட்ட அனைத்து விபரங்கள்)

(ii) கணக்கு விபரப்பட்டியல்

(iii) மெம்பர் - வாடிக்கையாளர் ஒப்பந்தத்தின் நகல்கள்

(iv) சம்பந்தப்பட்ட கான்ட்ராக்ட் நோட்கள், விற்பனை/வாங்கல் நோட்கள் (பதிவு பெற்ற சப்-புரோக்கர் எனில்) போன்றவற்றின் நகல்கள் மற்றும் பில்கள்

(v) நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட் பெயரில் பிராந்திய மத்தியஸ்த மையத்தில் டெபாசிட் ஆகச் செலுத்தப்படத் தக்க செக்/பே ஆர்டர்/ டிமாண்ட் டிராஃப்ட்.

(vi) எக்ஸ்சேஞ்சால் வழங்கப்படும் தகுதிமிகு நபர்களின் பட்டியலில் இருந்து விணண்ப்பதாரரால் தேர்வு செய்யப்படும் மத்தியஸ்தர்களின் பெயர்கள் அடங்கிய படிவம் எண். II.

**கே. எக்ஸ்சேஞ்சால் நடத்தப்படும் மத்தியஸ்த மையங்கள் எங்கே உள்ளன?**

வி. தற்போது மத்தியஸ்த நடவடிக்கைகள் மும்பை, டெல்லி, கல்கத்தா மற்றும் சென்னையில் எக்ஸ்சேஞ்சால் மேற்கொள்ளப்படுகின்றன. அவைகள் ரீஜனல் ஆர்பிட்ரேஷன் சென்டர்கள் (ஆர்ஏசி) அதாவது பிராந்திய மத்தியஸ்த மையங்கள் எனக் குறிப்பிடப்படுகின்றன. ஒவ்வொரு ஆர்ஏசி-யின் கீழ்வரும் மாநிலங்களின் விபரம் கீழ்க்கண்டவாறு:

| மத்தியஸ்த அமர்வுகள் ரீஜனல் ஆர்பிட்ரேஷன் சென்டர்கள் | ஆர்ஏசி-யின் வரம்புக்குட்பட்ட மாநிலங்கள் |
|---|---|
| டெல்லி | டெல்லி, ஹரியானா, உத்திரப் பிரதேசம், இமாச்சலப் பிரதேசம், பஞ்சாப், ஜம்மு அண்ட் காஷ்மீர், சண்டிகர், ராஜஸ்தான். |
| கல்கத்தா | மேற்கு வங்காளம், பீகார், ஒரிஸ்ஸா, அஸ்ஸாம், அருணாச்சல் பிரதேஷ், மிஜோராம், மணிப்பூர், சிக்கிம், மேகாலயா, நாகலாந்து, திரிபுரா. |
| சென்னை | ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு, அந்தமான் அண்ட் நிக்கோபார், லக்ஷத்வீப், பாண்டிச்சேரி. |
| மும்பை | மகாராஷ்டிரா, குஜராத், கோவா, டாமன், டையூ, தாத்ரா அண்ட் நகர் ஹவேலி, மத்தியப் பிரதேசம் |

மேலே குறிப்பிடப்பட்டவற்றில் சம்பந்தப்பட்ட ஆர்ஏசி-யை ஒரு நபர் அணுக வேண்டும்.

**கே. எந்த ஒரு குறிப்பிட்ட ரீஜனல் ஆர்பிட்ரேஷன் சென்டரிலும் (ஆர்ஏசி) விண்ணப்பத்தை தாக்கல் செய்வதற்கு ஏதேனும் விதிமுறைகள் உண்டா?**

வி. ஆர்ஏசி-யில் விண்ணப்பத்தைத் தாக்கல் செய்வதற்கான வழிமுறைகள் கீழே:

| பிரச்சினைக்கு உட்பட்ட நபர்கள் | மத்தியஸ்தத்துக்காக விண்ணப்பத்தை தாக்கல் செய்யுமிடம் | விசாரணை செய்யப்படும் இடம் |
|---|---|---|
| டி.எம்* V/S டி.எம்* | அ) இரண்டு டிரேடிங் மெம்பர்களும் வணிகத்தில் ஈடுபட்டுள்ள அலுவலகங்கள் குறிப்பிட்ட ஒரு ஆர்ஏசி-யின் வரம்புக்குட்பட்ட மாநிலங்களில் ஒன்றில் இருந்தால், விண்ணப்பதாரர்-டிரேடிங் மெம்பர் குறிப்பிட்ட அந்த ஆர்ஏசி-யில்தான் விண்ணப்பத்தை தாக்கல் செய்ய வேண்டும்.<br><br>ஆ) இரண்டு டிரேடிங் மெம்பர்களும் வணிகம் செய்த அலுவலகங்கள் வெவ்வேறு மாநிலங்களில் இருந்திருக்குமானால், விண்ணப்பதாரர்- டிரேடிங் மெம்பரின் வணிகம் நடைபெற்ற அலுவலகம் எந்த ஆர்ஏசி-ன் கீழ் வருகிறதோ அங்குதான் மத்தியஸ்தத்துக்கான விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட வேண்டும். | விண்ணப்பதாரர்-டிரேடிங் மெம்பர் விண்ணப்பித்த ஆர்ஏசி-யில் விசாரணை நடத்தப்படும். அப்போது பிரதிவாதி- டிரேடிங் மெம்பர் அந்த குறிப்பிட்ட ஆர்ஏசி-யில் விசாரணையின்போது ஆஜராக வேண்டும். |
| டி.எம்* V/S கா* & கா* V/S டி.எம்* | டிரேடிங் மெம்பரின் வணிக அலுவலகம் உள்ள மாநிலப் பகுதி எந்த ஆர்ஏசி-ன் கீழ் வருகிறதோ அங்கு விண்ணப்பதாரரால் மத்தியஸ்தத்துக்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | மத்தியஸ்தத்துக்காக விண்ணப்பதாரர் விண்ணப்பித்துள்ள ஆர்ஏசி-யில் விசாரணை நடத்தப்படும். அப்போது பிரதிவாதி அந்த குறிப்பிட்ட ஆர்ஏசி-யில் விசாரணையின்போது ஆஜராக வேண்டும். |

*டி.எம். என்பது''டிரேடிங் மெம்பர்'' மற்றும் ''கா'' என்பது ''கான்ஸ்டிடியூயன்ட்'' (வாடிக்கையாளர்) என்பதையும் குறிக்கும்.